பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
*05 03 2026 THURSDAY 12 40 PM*
ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தமிழகம் உட்பட 10 மாநிலங்களிலிருந்து 37 மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

2. மாநிலங்களவை தேர்தலில் தாம் போட்டியிடுவதாக பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் அறிவித்துள்ளார்.

3. டிஜிட்டல் பொது கட்டமைப்பில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. சீனாவில் பாதுகாப்பு துறைக்கான நிதி ஒதுக்கீட்டை, அந்நாட்டு அரசு 10 சதவீதம் அதிகரித்துள்ளது.

5. சிங்கப்பூர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சாத்விக் ரெட்டி - ராதிகா சர்மா இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

தமிழகம் உட்பட 10 மாநிலங்களிலிருந்து, 37 மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறும், மனுக்களை திரும்பப் பெற வரும் 9ஆம் தேதி கடைசிநாளாகும்.

போட்டியிருக்கும் பட்சத்தில் அடுத்த மாதம் 16ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்.

மஹாராஷ்ட்ராவிலிருந்து 7

தமிழகத்திலிருந்து 6

மேற்குவங்கம் மற்றும் பீகாரிலிருந்து தலா 5

ஒடிசாவிலிருந்து 4

அஸ்ஸாமிலிருந்து 3

சத்திஷ்கர், தெல்ங்கானா, ஹரியானா மாநிலங்களிலிருந்து தலா 2

மற்றும் ஹிமாச்சலப்பிரதேசத்திலிருந்து ஒரு உறுப்பினரையும் தேர்ந்தெடுப்பதற்காக இந்த தேர்தல் நடைபெறுகிறது.

இதற்கிடையே, பீகார் மாநிலத்திலிருந்து மாநிலங்களவை உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் தாம் போட்டியிடப் போவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் அறிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதற்கான அறிவிப்பை வெளியிட்ட அவர், கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக முதலமைச்சராக பணிபுரிய தமக்கு வாய்ப்பளித்ததற்காக, பீகார் மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

தமிழகத்திலிருந்து அஇஅதிமுக சார்பில் போட்டியிடும் திரு. தம்பிதுரையும், அதன் கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமக சார்பில் டாக்டர் அன்புமணி ராமதாஸும் இன்று வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஃபின்லாந்து அதிபர் திரு. *Alexander Stubb* இடையேயான பேச்சுகள் இன்று புதுதில்லியில் நடைபெற்றன.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து, இந்த பேச்சுகளின் போது விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் – ஃபின்லாந்து அதிபரை சந்தித்து பேசினார்.

>>>>><<<<<

ஏழை மக்களின் மேம்பாட்டிற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி அயராது பணியாற்றி வருவதாக, கனடா பிரதமர் திரு. *Mark Carney* கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தொலைநோக்குப் பார்வையுடன் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

அரசு திட்டங்களின் பலன்கள், அனைத்து தரப்பினரையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அரசு நிர்வாகத்தையும், கட்சிப் பணிகளையும் சிறப்பாக அவர் மேற்கொண்டு வருவதாகவும் கனடா பிரதமர் தெரிவித்தார்.

>>>>><<<<<

கைத்தறி நெசவாளர்களின் மேம்பாட்டிற்கு, மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்கள் காரணமாக, நெசவாளர்கள் - தொழில் முனைவோர்களாக உருவாகி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் நெசவாளர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

டிஜிட்டல் பொது கட்டமைப்பில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

ஸ்பெயினின் பார்சிலோனாவில் நடைபெற்று வரும், மொபைல் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மொபைல் ஃபோன் உற்பத்தி இந்தியாவில் வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மொபைல் டேட்டா-விற்கான கட்டணங்களும் 97 சதவீதம் குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த துறையில் எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

கடல்சார் துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென இந்தியாவும் - பிலிப்பைன்ஸூம் முடிவு செய்துள்ளன.

இதுதொடர்பாக பிலிப்பைன்ஸ் நாட்டு குழுவினர், புதுதில்லியில் மத்திய அரசின் குழுவினரோடு பேச்சுகள் நடத்தினர்.

கடல்சார் சுற்றுச் சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், ஒருங்கிணைந்து செயல்படுவதென இந்த பேச்சுகளின் போது தீர்மானிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு தீவிரவாதம் அச்சுறுத்தலாக உள்ளது என்று இந்தியா கூறியுள்ளது.

ஐ.நா-வின் தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான வருடாந்திர தூதரக அதிகாரிகள் நிலையிலான பேச்சுக்களின் போது, இந்தியா இக்கருத்தை பதிவு செய்துள்ளது.

ஐ.எஸ் மற்றும் அல்கொய்தா போன்ற தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக சர்வதேச நாடுகள் ஒருங்கிணைந்து போராட வேண்டியதன் அவசியத்தையும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் புதிதாக 30 சிப்காட் தொழில் வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

816 புதிய தொழிற்சாலைகளுக்காக, 7 ஆயிரத்து 558 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தொழில்துறையின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் அதில் பட்டியலிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

குஜராத்தில், சர்தார் ஒற்றுமை யாத்திரையை அம்மாநில முதலமைச்சர் திரு. Bhupendra Patel இன்று அஹமதாபாதில் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டின் இரும்பு மனிதர் என போற்றப்படும் சர்தார் வல்லபபாய் பட்டேலின் புகழுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடர்ந்து புகழ் சேர்த்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஒரே பாரதம் - உன்னத பாரதம் இயக்கத்தின் கீழ், பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதையும் திரு. Bhupendra Patel சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

தில்லியில் கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கூறியுள்ளார்.

இன்று, கஷ்மிரி கேட் அருகே, நடைபாதை மேம்பாலம் கட்டுவதற்கான பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

*3 கோடி ரூபாய் செலவில் இந்தப் பாலம் அமைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.*

*லடாக்கின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் இந்த பாலம் வடிவமைக்கப்பட்டிருப்பதாகவும் திருமதி. ரேகா குப்தா கூறினார்.*

*>>>>><<<<<*

*கர்நாடகாவில், அரசு அதிகாரிகளின் இல்லங்களில் லோக் ஆயுக்தா அதிகாரிகள் இன்று சோதனை மேற்கொண்டனர்.*

*வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக கூறி, பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக லோக் ஆயுக்தா கூறியுள்ளது.*

*பெங்களூரு, மண்டியா, தார்வாட், ஹசன், மைசூர், விஜய்புரா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>><<<<<*

*பிரதமரின் மக்கள் மருந்தகம், குறைந்த செலவில் தரமான மருந்துகளை விற்பனை செய்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*இதன் காரணமாக, பொதுமக்களிடையே இந்த மருந்தகங்களுக்கு வரவேற்பு அதிகரித்துள்ளதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>><<<<<*

*மிஸோரமில் 31 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை அம்மாநில போதைப்பொருள் தடுப்பு அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.*

*எல்லைப் பகுதியை ஒட்டிய, பல்வேறு இடங்களில் நடத்திய சோதனையின் போது இவை பறிமுதல் செய்யப்பட்டதாகவும், இதுதொடர்பாக 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அம்மாநில காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

*>>>>><<<<<*

*சீனாவில், பாதுகாப்பு துறைக்கான நிதி ஒதுக்கீட்டை அந்நாட்டு அரசு 10 சதவீதம் அதிகரித்துள்ளது.*

*பாதுகாப்பு படையை நவீனமயமாக்கும் நோக்கில், நிதிஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக சீன அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>><<<<<*

*நேபாளத்தில் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று வருகிறது.*

*அந்நாட்டு இடைக்கால பிரதமர் திருமதி. Sushila Karki, காத்மண்டு தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடியில் தமது வாக்கினை செலுத்தினார்.*

*சற்றுமுன்வரை, 18 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>><<<<<*

*அமெரிக்க - இஸ்ரேல் கூட்டு தாக்குதலில் உயிரிழந்த ஈரான் தலைவர் அயத்துல்லா அலி கமேனி-யின் இறுதிச்சடங்குகள் இன்று தொடங்கின.*

*டெஹ்ரானில் நடைபெற்று வரும் இந்த இறுதிச் சடங்குகில் ஏராளமானோர் பங்கேற்றுள்ளனர்.*

*3 நாட்கள் இறுதிச் சடங்குகள் நடைபெற்று, பின்னர் அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.*

*>>>>><<<<<*

*சிங்கப்பூர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சாத்விக் ரெட்டி - ராதிகா சர்மா இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-13, 21-17 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Frengky Wijaya Putra - Putri Sari Dewi Citra இணையை வென்றது.*

*Lakshita Jaglan - Mohit Jaglan இணை மற்றும் ரோஹித் மோகன் குமார் - ரிதுவர்ஷினி ராமசாமி இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.*

*>>>>><<<<<*

*உலக கோப்பை டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.*

*மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.*

*>>>>><<<<<*

***Thionville* ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் விஜய் சுந்தர் பிரசாந்த் - ஸ்பெயினின் *Sergio Martos Gornes* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.**

**ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்த இணை *6-7, 6-3, 13-11* என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் *Nathaniel Lammons - Jackson Withrow* இணையை வென்றது.**

***>>>>><<<<<***